***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***STC.No.1829/2023 – P.W.1***

| | |
|---|---|
| *Name* | அஹமது நாச்சியா |
| *Father/Husband's Name* | நூர் முகமது, |
| *Village* | பொதக்குடி |
| *Age* | *36* |

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 10.11.2025*

***எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை***

1. இந்த வழக்கின் எதிரி எங்கு வைத்து, எப்போது என்னிடம் பணம் கேட்டார் என்பது குறித்த எனது புகாரிலோ, நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரியின் மனைவி மற்றும் குழந்தைகள் பெயர் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. நான் வருமான வரி செலுத்தவில்லை என்றால் சரிதான். நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் எதிரியிடம் பணம் கொடுத்து 3 மாதங்கள் கழித்து தான் அவரிடம் பணம் குறித்து கேட்டேன். என்னிடம் கடன் பெற்ற தொகைக்கு தற்போது வரை வட்டி தொகை எதுவும் எதிரி என்னிடம் கொடுக்கவில்லை.

2. எதிரி கடன் தொகைக்கு வட்டி கொடுக்காதது குறித்து போலீசாரிடம் புகார் கொடுத்னேனா என்றால் இல்லை. ஜாகீர் உசேன், சையது அலி பாத்திமா ஆகியோர்களை எனக்கு தெரியுமா என்றால் எனது ஊர்க்காரர்கள் தான். நீதிமன்றத்தில் வந்தபிறகு தான் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் காசோலையில் தேதி மற்றும் அதில் எழுதப்பட்டுள்ள விவரங்கள ஒரு பேனாவிலும், கையொப்பம் மற்றொரு பேனாவிலும் எழுதப்பட்டது போல் உள்ளது என்றால் சரிதான். ஆனால் அவர் தான் அதை எழுதிக்கொடுத்தார்.

3. எதிரி என்னிடம் காசோலை கொடுத்தற்கு பிறகு 3 நாட்கள் கழித்து நான் வங்கியில் பணமாக்குவதற்காக தாக்கல் செய்தேன். அதற்கு பிறகு 3 நாட்கள் கழித்து வங்கியில் சென்று பணம் கேட்டபோது எதிரியின் வங்கி கணக்கில் பணம் எதுவும் இல்லை என்று சொன்னார்கள். மேற்படி விவரத்தை எனது புகாரிலும், நிரூபணம்

வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் சரியாக தெரியவில்லை. எதிரிக்கு நான் பணம் கொடுத்த விவரங்கள் என் கணவருக்கு தெரியுமா என்றால் தெரியும். என் கணவருக்கு எதிரியை எப்போதிலிருந்து தெரியும் என்றால் அவரும் ஊர்க்காரர் தான் சிறு வயதிலிருந்தே தெரியும். நான் இந்த வழக்கில் புகாரில் சொல்லியுள்ளபோது எதிரிக்கும் எனக்கும் இடையே பண பரிவர்த்தனை எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு ரூ.2,00,000/- தொகை கொடுப்பதற்கு எனக்கு பண தகுதி இல்லை என்றால் சரியல்ல. வேறு ஒரு நபருக்காக இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் புகாரில் சொல்லியுள்ளபோது எதிரிக்கும் எனக்கும் இடையே பண பரிமாற்றம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரி என்னிடம் காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 10.11.2025

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.